எண்ணிக்கையை அதிகப் படுத்த முடியுமா ? இல்லாவிடில், இண் டெலிஜண்ட் ஸ்டாப் வாரம் ஒரு முறை கிராமங்களுக்கு செல்ல ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஸ்தலப் போலீசுகாரர்கள் கேசுகளைக் கண்டு பிடிக்கிறார்கள். அவர்களுக்கு லாரி முதலியவை கொடுத்து, எவ்வளவு துரிதமாகப் போகமுடியுமோ அந்த விதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவர்களால் முடியாத கேஸ்களில், இண் டெலிஜண்ட் பீரோ வேலை செய்கிறார்கள்.

மீன் பிடித்தல் (நார்வே நாட்டு முறை)

* 131 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

நார்வே மீன் பிடித்திட்டத்தை கிழக்கு இராமநாதபுரம் கடற்கரைப் பகுதியில் செயல்படுத்த ஏதாவது திட்டமுண்டா ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Yes.

திரு. கரு. சீமைச்சாமி : எப்பொழுது இந்த மீன் பிடி திட்ட வேலை ஆரம்பமாகும் ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : கூடிய சீக்கிரத்தில் ஆரம்பமாகும்.

Utilization of Cauvery water and of other rivers

* 132 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state the conclusions reached at the meeting of the Zonal Council held at Hyderabad during May 1963, regarding the utilization of waters in the River Cauvery and its tributaries and other inter-State West-flowing rivers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The finalised proceedings of the meeting of the Southern Zonal Council held at Hyderabad on the 28th May 1963 have not yet been received. A copy of the proceedings of the meeting as placed in the Library of the Parliament will be placed in due course in the Library of the State Legislative Assembly also. Till then, the proceedings of the meeting are not to be disclosed according to the Southern Zonal Council Rules of Procedure.

திரு. கே. மூக்கையா தேவர் : ஸார், சமீபத்திலே நம் மாநிலத் திலிருந்து கனம் ஆர். வெங்கட்டராமன் அவர்களும், கனம் ராமையா அவர்களும் கேரளத்திற்குச் சென்று நதித் தண்ணீர் சம்பந்தமாக ஏதாவது பேசப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது வேறு விஷயம் தனிக் கேள்வி போடவேண்டும்.